ரவி போனில் கூப்பிடும்போது மணி 2.30 மதியம்.
"நான் உங்களை உடனே பார்க்கணும் பிங்கோ, எங்க பார்க்கலாம்?".

"என்ன, வழக்கம் போல நம்ம சிம்ரன் காபிக்கடையிலதான், 3மணிக்கு வாங்க"
ரவி ஷார்ப்பாக வந்துவிட்டான்.

ரவியின் கருப்பு முகம் இப்போது இன்னும் இருண்டு வாடிப்போயிருந்தது.
ரவியின் வீட்டில் மனைவியோடு பிரச்சனை என்று புரிந்து கொண்டான், சிபி.

"சொல்லுங்க ரவி"
"லெட்டர் எழுதி வச்சுட்டு போய்ட்டாங்க"..

"அய்யய்யோ, என்ன பிரச்சனை?"
-பொங்கல் அன்னிக்கு அவளை நான் கொஞ்சம் அடிச்சுட்டேன் சிபி...
அதான் கோவிச்சிட்டு, லட்டர் எழுதி அதிகாரிகிட்ட கொடுத்துட்டு போய்ட்டா.
அவங்க என்ன விசாரணைக்கு கூப்பிடுறாங்க.

ரவியியும் சிபியியும் மத்திய அரசு வேலை பார்க்கிறார்கள்.
இந்தக் காலப் பெண்களுக்கு நல்லாவே தெரிகிறது,
யாரை எப்ப, எங்க, எப்படி மாட்டி விடுறதுன்னு..

அடப் பாவமே, நீங்க என்ன ரெகுலரா அடிப்பீங்களா என்ன?
-ஸீ, சிபி, யார் வீட்டுலதான் சண்டை இல்ல, சச்சரவு இல்ல, நான் மொத்தமாவே மூனு தரம் தான் அடிச்சுருக்கேன். முதல்ல நகைய கேட்டு அடிச்சேன், அப்புறம் ஒண்ணு, இது மூணாவது தரம்.

ரொம்ப பலமா அடிச்சுட்டீங்களா?
-இல்லங்க, லைட்டாத்தான்.
அதுக்கே  இவ்வளவு கோவப்பட்டு அதிகாரி வரைக்கும் போய்ட்டாங்களே?

-அது தான் சிபி எனக்கும் ரொம்ப கஷ்டமா இருக்கு. இப்போ அவளை சமாளிக்கிறதா, இல்ல, அதிகாரிகளை சமாளிக்கிறதான்னு இருக்கு.

யார் உங்களை விசாரிப்பாங்க?, இது தமிழ்காரங்க பிரச்சனை என்பதால தமிழ் ஆபிசர் யாரையாவது தான் போடுவாங்க. மோஸ்ட்லி யாருமே உங்களை துன்புறுத்த மாட்டாங்க, ஆனா அந்த லட்டர்ல என்னா எழுதியிருக்காங்கன்னு பார்க்கணும், அத வச்சுத்தான் விசாரணை இருக்கும்

-நல்லவேளையா அந்த லட்டர்ல ஒரு காப்பிய வீட்ல வச்சுட்டுதான் போயிருக்கா, ரொம்ப மோசமா ஒண்ணும் எழுதலை, 3 தடவ அடிச்சான், நகைய கேட்டு அடிச்சான்னு எழுதியிருக்கா..

உங்களுக்கு ஆட்சேபணை இல்லன்னா அத நான் படிச்சு பார்க்கலாமா?
-ம்.. படிங்க, இந்தா இருக்கு...

லட்டரை சிபி பார்த்தான்.. அந்த அவசரத்திலும் இலக்கணப் பிழையின்றி, திருத்தமாக, தெளிவாக சிந்தித்து, எழுதி இருந்தாள் அவள்.

கணவனை ஒரேயடியாக மட்டம் தட்டாமலும், அதே சமயம் அவரிடம் உள்ள இந்த மிருகக் குணத்தையும்

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

கூறி, இதனால் என் வாழ்க்கை துயரமாக உள்ளது, உங்களால் முடிந்ததை செய்யுங்கள்.. என்று முடித்திருந்தாள் அந்தப் பெண்.

ஒண்ணும் பயப்படும்படியா இல்ல ரவி, கவலப்படாதீங்க, இப்ப உங்களோட எண்ணம் என்ன?
நீங்க அவங்களோட சேர்ந்து வாழணும்னு நினைக்கிறிங்களா இல்லையா?

-அது எப்படி சிபி?, எனக்கு ஒரு ஆண் குழந்தை இருக்கே?, குழந்தைக்காவது வாழ வேண்டாமா?
அப்படின்னா, லீவு போட்டுட்டு ஊருக்குப் போய் கூப்பிட்டுட்டு வாங்க.

-அய்யோ, சிபி, அங்கதான் பிரச்சனையே!. அவ வீட்டுக்கு போன் போட்டு பேசினா, அவ பேசவே மாட்டேங்கிரா, அவ அம்மாவும் பேசாம போனை தூர வச்சுட்டு போயிர்ராங்க, எனக்கு என்னமோ அவங்க ரொம்ப லீகலா போய்டுவாங்களோன்னு பயமா இருக்கு...

ம்ம்ம்... சிவில் போலிஸ் கிட்டே அவங்க போகக் கூடாது, போனா, அவனுங்க இதுல எப்படிடா பணம் பார்க்கலாம்னு அலைவானுங்க..

அப்படி அவங்க நெகடிவா போனாலும் ஒண்ணும் குத்தம் இல்ல ரவி, வாழ்க்கை என்னா அதோடையா முடியப்போகுது?. நீங்க படிச்சு நல்ல வேலையில இருக்கிங்க.. இன்னொரு பொண்ணு கிடைக்காமலா போயிருவா?

இந்த வார்த்தையை கேட்டதும் ரவி துள்ளி எழுந்தான்...

-என்ன சிபி நீங்க இப்படி பேசலாமா? நான் என்ன அந்த மாதிரி இன்னொரு பொண்ண தேடிப் போறவனா?

என்ன ரவி இப்படி உணர்ச்சிவசப்படுறீங்க, நான் பாஸிடிவாதான் பேசுரேன், ஆனாலும் அவங்க சைடுல ரொம்ப தீவீரமா போறதுனால நீங்க பெஸ்ட் கேஸ் சீனரியொ, வொர்ஸ்ட் கேஸ் சீனரியொ ரெண்டையும் சிந்திச்சுப்பார்த்து எதுக்கும் தயாராகிக்கணும் இல்ல...

-ஓ அப்படிச் சொல்ரீங்களா... சாரி..

ரெண்டு பேரும் டீ குடித்தார்கள்...

சரி ரவி, நாளைக்குப் பார்க்கலாம்... தைரியமா இருங்க... ஒண்ணும் ஆகாது...

சிபிக்கு கஷ்டமாக இருந்தது, அவனுடைய அக்கா விவாகரத்து ஆனவர் தான். அவனுடைய அக்கா விவாகரத்து ஆகும் போது இவன் சிறுவன். சொந்தக்காரப் பையன் தான். பணப் பைத்தியம். லெக்சரர் ஆச்சே, துட்டு நிறைய வாங்குவாளே என்று பிளான் போட்டு லவ் பண்ணி கட்டினான். கல்யாணத்திற்கு முன்பே எச்சரித்தார்கள்.. அவன் ஒரு பிராடு பேர்வழி, ஒரு கம்பெனியிலும் ஒரு வேலையும் ஒழுங்காகப் பார்க்கவில்லை என்று. ஆனால் காதலித்த குற்றத்திற்காக அவனைக் கட்டினாள் அக்கா. 7 வருஷ மண வாழ்க்கையில் அவன் வேலைக்குப் போய் சம்பாதித்தது என்பது 2 வருஷம் தான். மீதி நாளெல்லாம் இவளது பணத்தை கரைத்து குடித்ததுதான் மிச்சம்.

அவனுடைய அப்பா அம்மா [சிபியின் தூரத்து மாமா, அத்தை] பாம்பே வாசம். அடிக்கடி பாம்பே பிளைட்டில் போனால் என்னாவது? பந்தா, பந்தா.. பொண்டாட்டி காசில் பந்தா..

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

பொண்டாட்டி பணத்தில் வாழ்ந்தாலும், அவள் மீது பாசமாக இருந்தானா? கிடையாது..
ஈகோ வேறு..

வெள்ளைத் தாளில் நீட்டிய இடம் எல்லாம் கையெழுத்து போட்டு இருக்கிறாள் M.Com படித்த அம்மணி. படிப்பிற்கும், வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லை என்பது எத்தனை உண்மை?

ஏட்டு சுரக்காய் கறிக்கு உதவாது என்று சும்மாவா சொன்னார்கள்?.

மாயவரத்தில் அவனது அக்கா கல்யாணம் நடக்க, இவளது கடைசி சொத்தான தாலியை கேட்டதும்தான் எடுத்தாள் வைராக்கியமான முடிவு... அன்று

போடா என்றதுதான், இன்று வரை திரும்பிக்கூட பார்க்கவில்லை. ஒரே ஒரு ஆண் பிள்ளை. 4 லச்சமோ, 6 லட்சமோ கடன்.. கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் அலைந்து, திரிந்து கடனைக் கட்டி வருகிறாள் அம்மணி. ரொம்ப நாளைக்கப்புறம் இப்பத்தான் குருவி சேர்க்கிறப் போலச் சேர்த்து ஒரு வீடு கட்டி இருக்கிறாள். ஆனால், பேரும்-வாழ்க்கையும் போனது போனது தானே? அதை மீண்டு எடுக்க முடியுமா?

மீண்டு வர வேண்டும் என்று தான் நினைத்தார்கள்..
எத்தனை விளம்பரம் பார்த்து எழுதி இருப்பான் சிபி?
ஒரு L.I.C ல் வேலை பார்க்கும் 39 வயதுள்ளவர் வந்தார்..
குடும்பம், பெண், எல்லாம் அவருக்குப் பிடித்துப் போயிற்று.
ஆனால் அவருடைய வீட்டில் அவருடைய "புரட்சிகரமான" எண்ணத்திற்கு யாரும் ஒத்துழைக்கவில்லை. அவர் மணமாகாதவர்.

இன்னொரு பிரபல பிராமண எழுத்தாளார் சென்னையிலிருந்து வந்தார்.
எனக்கும் , என் மனைவிக்கும் compatibility இல்ல, மற்றபடி எங்களுக்குள்ள எந்தப் பிரச்சனையும் இல்ல என்றார்.
இந்த எழுத்தாளர்களே வித்தியாசமானவர்கள்..
தனக்கென்ற ஒரு உலகத்தில் சஞ்சரிப்பவர்கள்...
சிபியின் அக்காவிற்கு எழுத்து பிடிக்கும், ஆனால் ரொம்ப மேதாவித்தனம் இல்லை...
போய் யோசித்து எழுதுகிறேன் என்று போனார்.
பிறகு ஒரு கதையில் இந்த சந்திப்பைப் பற்றி எழுதினார்...
கதை எழுதுறவங்களே இப்படித்தான், எதற்கும் சொல்யூஷன் கொடுக்கக் மாட்டார்கள்... பிறர் துயரத்தை எழுதி, காசு பார்ப்பார்கள்...
ஹ்ம்ம்ம்... சிபிக்கு பெருமூச்சுதான் வந்தது.
அதன்பிறகு அக்காவிற்கு இன்னொரு கல்யாணத்திற்கு விருப்பமில்லை..
பையன் வேறு வளர்ந்து விட்டான்.

இந்த நினைவுகளோடு ரொம்ப நேரம் தூக்கம் வராமல் தவித்தான் சிபி.
இரண்டு நாள் கழித்து ரவியிடம் இருந்து மீண்டும் போன்.

"சிபி, அதே சிம்ரன், அதே ஸீட், உங்ககிட்ட பேசணும்.."
ரவிக்கு சிபி வீட்டிற்கு வர கூச்சம், சிபியின் மனைவி ஏதும் கேட்டு விடுவாளோ என்று..

ரவி இம்முறை கொஞ்சம் தெளிவாக இருந்தான்..
-சிபி என் மனைவி வீட்டுல ரொம்ப ஸீரியஸா போறாங்க...
-அனேகமா கோர்ட்டு, டாமேஜ்னு போவாங்க போல..

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

-நான் முதல்ல அடிச்சத டாக்டர்ட்ட போய் சொல்லி, மெடிக்கல் சர்டிபிக்கேட் எல்லாம் வாங்கி வச்சு, இப்போ அத வச்சு மிரட்டுராங்க...
-கோர்ட்டுக்கு போனா என்ன ஆகும் சிபி?

ரெண்டு முறை இருக்கு ரவி.. ஒண்ணு - ம்யூச்சுவல் விவாகரத்து, இன்னொண்ணு போராடிப் பார்க்கிறது.. ம்யூச்சுவல் டிவோர்ஸில உடனடியா குடுத்துருவாங்க.. இப்பல்லாம் பேமிலி கோர்ட்டு வந்தாச்சு.. ரொம்ப பாஸ்ட்டா இருக்கு. போராடினா, எப்படியும் 2, 3 வருஷம் ஆகலாம்.. டென்சம் தான் மிச்சம். பணம் போகும், மானம் போகும்.

-அவங்க அந்த லைன்லதான் போறாங்க..
-நான் அடிச்சது தப்புன்னு ஒத்துக்கிறேன்.. இனிம அடிக்க மாட்டேன்னு அவ கிட்ட சொல்லிப்
-பார்த்துட்டேன்.. இருந்தாலும் நம்ப மாட்டேங்கிறா..

ரவி.. நான் வேணா பேசிப் பார்க்கட்டா? உங்க மனைவிகிட்ட? நீங்க அனுமதிச்சா?

-செய்யுங்க சிபி..
போனில் நம்பரை ஒத்திக் கொடுத்தான் ரவி.

"ஏம்மா.. யாரோ சிபியாம்.. உங்கிட்டே பேசணுமாம்.."

சிபிக்கு முதலில் கோர்வையாக பேச வரவில்லை... இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக பேசி சரளமாக பேச ஆரம்பித்துவிட்டான்.

அவனுடைய வாழ்வின் பல படிப்பினைகள், அவனது அக்காவின் வாழ்க்கையின் மூலம் இவன் அறிந்த உலகம் எல்லாம் சேர்ந்து, எப்படியாவது இந்த தம்பதிகளை தன்னால் இயன்றால் இணைத்து வைத்து விட வேண்டும் இன்ற ஆசை அவனுள் பிறந்தது.

-"அவன் ஒரு சாக்கடைங்க" -ரவியைப் பற்றி அவன் மனைவி ரொம்ப மோசமாக சொன்னது இதுதான்.

இருந்தாலும், எத்தனையோ படித்தவர்கள், பெரியவர்கள் கூட வீட்டில் மிருகத்தனமாக நடந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அய்ன்ஸ்டீன், கமல், சார்லி சாப்ளின்.. இவர்தான் இனிமேல் அடிக்க மாட்டேன் என்று சொல்கிறாரே?.

-பிள்ளை மேலயே சத்தியம் பண்ணி கொடுத்தவர் இவர்.. அதுக்குப் பிறகும் அடிதான்.. எனக்கு தல வீங்கி போச்சுங்க.. கத்தி, சப்பாத்தி கட்டை எல்லாம் ஒளிச்சு வச்சுட்டுதான் படுப்பேன்..
-ரொம்ப சாதரணமா கெட்ட வார்த்த பேசுறார்..
-என்னய மட்டுமா?, எங்க அம்மாவையும் சேர்த்துல்லா திட்டுறார்..
-எங்கம்மா என்ன பாவம் பண்ணினாங்க?
-சந்தேகப் புத்தி வேற...

எல்லாம் சரிதாங்க, நான் என்ன அவர் நல்லவர்னா சொல்றேன்.. ஆனா, அவர் தான் துணிய தானே துவைக்கிறார், நிறைய தடவ சமையல் கூட அவர் பண்ணி வச்சுட்டு போயிர்றார்னு நீங்க தானே பெருமையா சொல்வீங்க?

-பெத்த பிள்ளைய ஒரு நாளும் தூக்கினது இல்லங்க..
-எங்க ரெண்டு பேரையும் தண்டச் சோறுன்னு தான் திட்டுவார்..

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com

எல்லாம் ஒத்துக்கிறேங்க.. ஆனா, நீங்க இப்ப கோவமா இருக்கீங்க, இந்த நிலைமையில ஏதும் அவசரப்பட்டு முடிவு எடுத்துராதீங்க..

-அவர் யார்கிட்டயமே காரியமாத்தானுங்க பழகுவார்.. உங்ககிட்ட கூட அப்படித்தான்...

எனக்கும் தெரியத்தான் செய்யுதுங்க.. ஆனா, 1%அவர் உங்க மனசில எங்கயாவது இருக்காரான்னு தேடிப்பாருங்க.. அப்படி இருந்துதுன்னா அதற்காக ஒரு இடம் கொடுங்க... அவ்வளவுதான் நான் சொல்றேன்.

-எப்படிங்க வாழ்க்கை முழுக்க நடிக்க முடியும்?
-எப்படிங்க வாழ்க்கை முழுக்க நடைப் பிணமா வாழ முடியும்!

கரெக்டா சொன்னீங்க!. நான் உங்களை ஊருக்காக நடிச்சு வாழச்சொல்லல.. நடைபிணமா வாழச் சொல்லல... just give a last try... அவர் உண்மையிலேயே உங்களை சந்தோஷமா வச்சிருப்பார்னு கடைசியா ஒரு முறை நம்பி வாங்க.. நானும் இங்க அவரை மாற்றுவதற்கான முயற்சி எடுக்கிறேன்.. அவ்வளவுதான் நான் எதிர்பார்க்கிறேன்.. நீங்க சந்தோஷமா வாழணும்னுதான் நான் நினைக்கிறேன்.. நடைப்பிணமா அல்ல...

அந்த போன் பண்ணி இப்ப பல நாள் ஆறது...

ரவி மனைவி குழந்தையோடு சேருவான்ற நம்பிக்கை சிபியிடம் இருக்கிறது...

PDF created with FinePrint pdfFactory Pro trial version http://www.fineprint.com